සියලුම හිමිකම් ඇවිරිණි/ முழுப் பதிப்புரிமையுடையது / All Rights reserved

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

தரம் 09 | முதலாம் தவணைப் பரீட்சை - 2019 | 33 T

சுட்டெண் ....................................................

## வரலாறு

நேரம் 2 மணித்தியாலம்

### பகுதி I

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **01 முதல் 05 வரையான வினாக்களுக்குரிய விடையினை அடைப்பினுள் இருந்து தெரிந்து எழுதுக.**

01. மலையக மன்னனாகிய 2ஆம் விமலதர்ம சூரியனுடன் .......................................... ஒப்பந்தம் செய்து கொண்டான்.

02. மடிகே முகாந்திரம் பதவிக்கு .......................................... பிரதேசத்திற்கு ஹஜ்ஜி மரிக்கார் எனும் முஸ்லிம் நியமிக்கப்பட்டார்.

03. 1818 ஆம் கலகத்தின் பின் .......................................... நீதிமன்றத்தினால் குற்றமிழைத்ததற்குத் தூக்கிலிட்டுக் கொல்லப்பட்டார்.

04. மெக்டோவலின் தலைமையிலான ஆக்கிரமிப்புக்குழுவொன்று .......................................... ஆளுநர் காலத்தில் மலையகத்திற்கு அனுப்பப்பட்டது.

05. கொங்காலே கொட பண்டா .......................................... எனும் பெயரில் தம்புள்ளையில் முடி சூடிக் கொண்டார்.

( கலன் அல்பட் / வெல்லஸ்ஸ / கெப்பெட்டிபொல / பிரட்ரிக் நோர்த் / ஸ்ரீ விக்கிரம சர்வசித்தி)

- **06 முதல் 10 வரையுள்ள வினாக்களுக்கு சரியெனின் (✓) எனவும், பிழையெனின் (✗) எனவும் குறிக்க.**

06. மலையக அரசனுக்கும் ஒல்லாந்தருக்குமிடையே கருத்து முரண்பாடுகள் ஏற்படும் போது கடவைகள் மூடப்பட்டமையால் உறவுகள் முறிவடையக் காரணமாகியது. ( )

07. ஸ்ரீ வீர பராக்கிரம நரேந்திரசிங்க மன்னன் குண்டசாலை இளவரசன் எனும் பெயரில் பிரசன்னமானான். ( )

08. பிரித்தானியரால் இந்நாட்டில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது வர்த்தகப் பயிர் கோப்பி ஆகும். ( )

09. பிரித்தானியருக்கு (கரைநாட்டு) மலைநாட்டு பிரதேசவாசிகளின் கொரில்லா போர்முறை காரணமாக பலத்த சேதம் ஏற்பட்டது. ( )

10. வீரபுரன் அப்பு 1818 சுதந்திரப் போராட்டத்திற்கு தலைமைத்துவம் வழங்கினார். ( )

- **11 தொடக்கம் 15 வரையான வினாக்களுக்குப் பொருத்தமான விடையினைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.**

11. ஒல்லாந்த தேசத் தூதுவரான ஸ்பில் பேஜன் இலங்கையில் தரையிறங்கிய இடம்,
    1. மட்டக்களப்பு 2. திருகோணமலை 3. காலி 4. மன்னார்

12. அரசின் கடிதங்கள் எழுதும் போது தங்களது பூரண கீழ்ப்படிவான என்றவாறு கடிதத்தை முடித்தமை எத்தேசத் தலைவரினாலாகும்?
    1. போர்த்துக்கேயர் 2. ஒல்லாந்தர்
    3. பிரான்சியர் 4. ஆங்கிலேயர்

13. ஜெனரல் ஜெராட் ஹல்பட் இனது தூதுப் பயணங்களின் போது அரசனுக்கு கொடுத்த பரிசுப் பொருள்?
    1. புத்தகங்கள் 2. மோதிரம் 3. சந்தன கட்டை 4. பாதணி

14. பாரம்பரிய முறையில் நியமனம் பெற்ற யாழ்ப்பாணம் பிரதேச வழக்கிலிருந்த பதவிப் பெயர்?
    1. கோறளை 2. முதலி
    3. விதானை 4. கங்காணி



kalvi.lk

15. பிரான்சியப் புரட்சியின் விளைவாக பிரான்சினால் ஒல்லாந்து ஆக்கிரமிக்கப்பட்ட போது பிரித்தானியரிடம் தஞ்சம் புகுந்த ஒல்லாந்த இளவரசன் யார்?
1. ஒரேஞ்ச் வில்லியம் 2. ஜெராட் ஹல்பட் 3. வெஸ்ட் ரிஜ்வே 4. ரொபின்சன்

- **16 தொடக்கம் 20 வரையான வினாக்களுக்குப் அட்டவணையை பூர்த்தி செய்து விடையளிக்குக.**

உள்நாட்டு விவசாயத்துக்கு பிரித்தானிய ஆளுநர்கள் ஆற்றிய பணிகள்.

| ஆளுநர் | செய்த பணிகள் |
|---|---|
| 16. ........................................................ | 1855 இல் சபை நியமித்தமை. |
| 17. ஹர்க்கியூல்ஸ் ரொபின்சன் | ........................................................................................................... |
| 18. ........................................................ | கூட்டுறவுச் சங்க வர்த்தகம் ஆரம்பிக்கப்பட்டமை. |
| 19. வெஸ்ட்ரிஸ்வே | ........................................................................................................... |
| 20. ........................................................ | வளவை கங்கை |

(2x20=40 புள்ளிகள்)

* * * * *

Education கல்வி අධ්‍යාපන




kalvi.lk

## பகுதி II

- **முதலாம் வினா கட்டாயமானது.**
- **முதலாம் வினா உட்பட மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

01. I. தரப்பட்ட உலகப்படத்தினை அவதானித்து,




அ) போர்த்துத்துக்கேயர் ஆசியாவிலிருந்து எடுத்துச் சென்ற பொருட்களை ஒல்லாந்தர் விலை கொடுத்து வாங்கிய துறைமுகம் A எழுத்தியால் காட்டப்பட்டுள்ளது. அது எது?

ஆ) ஒல்லாந்தரின் தாய்நாடு எவ்வெழுத்தினால் காட்டப்படுகின்றது?

இ) போர்த்துக்கல்லின் ஆட்சியாளனான 2ஆம் பிலிப் அரசனின் தாய்நாடு எவ்வெழுத்தினால் காட்டப்பட்டுள்ளது?

ஈ) ஒல்லாந்தரின் கீழைத்தேய வர்த்தக மத்திய நிலையமாக விளங்கிய பத்தேவியாவை குறிப்பிடும் எழுத்து எழுத்து?

ii. அ) படத்தில் காட்டப்படுவது யாது?

ஆ) அது எந்நாட்டுக்குரியது?

இ) ஆசியாவில் வர்த்தகம் செய்வதற்கு தொடர்பாக இச்சங்கம் பெற்றுக் கொண்ட அதிகாரங்கள் 2 எழுதுக.



iii. பிரித்தானியருக்கெதிரான போராட்டங்கள் குறித்த பின்வரும் அட்டவணையை பூர்த்தி செய்க.

| சுதந்திரப் போராட்டம் | ஆரம்பித்த பிரதேசம் | தலைவர்கள் | பரவிய இடங்கள் |
|---|---|---|---|
| 1. ................................ | ஊவா வெல்லஸ்ஸ | 2. ................................ | ஹாரிஸ்பத்துவ |
| 1848 | 3. ................................ | 4. ................................ | தமன்கடுவ |

iv. கீழே தரப்பட்டுள்ளவை மலையக அரசியல் போராட்டங்களில் சில சந்தர்ப்பங்கள்.

A தலதா மாளிகைக்கு அருகில் நவீனமயப்படுத்தும் வேலைத்திட்டத்திற்கு பிக்குகளின் இணக்கப்பாடு கிடைக்கப்பெறாமை.

B பிரபுக்களின் பலம் அதிகரித்திருந்த பிரதேசத்தை சிறிய நிர்வாக இலகுகளாகப் பிரித்து அவற்றுக்காக புதிய அதிகாரிகளை நியமித்தமை.

C மொல்லிகொட, எகலபொல ஆகியோருக்கிடையிலான பிணக்கு காரணமாக மலையக இராசதானியின் ஐக்கியம் சிதறியமை.

D கண்டி சமூகமளித்த சப்ரகமுவ 4 கோறளை மக்களுக்கு இரவு நேரத்திலே தலைநகரில் தங்க அனுமதி மறுத்தமை.



kalvi.lk

என்பவற்றை அட்டவணையில் காட்டுக.

| அரசன் பிரபுக்களிடையே போராட்டம் | அரசன் / பிக்கு-களிடையே கலவரம் | பிரபு பிரபுக்களிடையே கலவரம் | அரசுக்கும் மக்களுக்குமிடையே போராட்டம் |
|---|---|---|---|
| | | | |

(பு.16)


02\. i. கீழே A, B, C எனும் கூற்றுக்களின் மூலம் மலைநாட்டுக்கு தூதுவர்களாக வருகை தந்த ஒல்லாந்து தூதுக்குழுக்கள் பற்றிக் குறிப்பிடுக.

A. கி. பி. 1602 இல் மூன்று கப்பல்களுடன் இலங்கை மட்டக்களப்பில் தரையிறங்கிய ஒல்லாந்து இனத்து அட்மிரல்.

B. முதலாம் விமலதர்ம சூரியன் முன்னிலையில் மன்னனை அவமதிக்கும் வகையில் பேசிய ஒல்லாந்த இனத்தவர்.

C. மலையக மக்களால் அலங்கார ஊர்வலம் அழைத்துச் செல்லப்பட்ட ஒல்லாந்த இனத்தவன் (பு.03)

ii. 1638 ஒப்பந்தத்தின் பின் ஒல்லாந்தர், போர்த்துக்கேயரிடமிருந்து கைப்பற்றிய கோட்டைகள் நான்கு A, B, C, D எனும் எழுத்துக்களால் படத்தில் காட்டப்பட்டுள்ளன. அவற்றைப் பெயரிடுக. (பு.04)




iii. ஒல்லாந்தர் ஆரம்பத்திலிருந்து 2 வது இராஜசிங்க மன்னனுடன் தந்திரமான முறையில் செயற்பட்ட இரு சந்தர்ப்பங்களைக் குறிப்பிட்டு விளக்குக. (பு.04)

03\. i. கீழே தரப்பட்டுள்ளவற்றுள் மலையக மன்னன் கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க காலத்தில் நடைப்பெற்ற நிகழ்வுகள் 3 தருக.

1. சீயம் நிக்காய ஆரம்பித்தமை.
2. பிட்டிகல கோரளையில் கறுவா உரிப்பதற்கு ஒல்லாந்தர் விதித்திருந்த தடையை நீக்கியமை.
3. ஜோன் பைபஸ் ஆங்கிலத் தூதுவர் வருகை.
4. 1766 உடன்படிக்கை கைச்சாத்திடல்.
5. பர்மாவிலிருந்து உபசம்பதாவிற்காக பிக்குகள் வரவழைக்கப்பட்டமை. (பு.03)

ii. ஒல்லாந்தரின் நிர்வாக நடவடிக்கைகள் இடம்பெற்ற கொமாண்டரிகளை ஆதாரமாகக் கொண்டு இடைவெளிகளை நிரப்புக.

| கொமாண்டரி | நிர்வாக அதிகாரி | உரிய பிரதேசம் |
|---|---|---|
| கொழும்பு | 1. ........................... | கொழும்பு, களுத்துறை, நீர்கொழும்பு |
| 2. ........................... | கொமாண்டர் | 3. ............................................. |
| 4. ........................... | கொமாண்டர் | புத்தளம், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு வரை |

(பு.04)



kalvi.lk

iii. கீழே தரப்படுவது ஒல்லாந்தரின் பொருளாதார நடவடிக்கைகள் சில. அது தொடர்பாக அவர்களது செயற்பாடுகளை எழுதுக.

A. கறுவாச் செய்கை

B. கறுவாச் சேகரித்தலும் விற்றலும்

C. கறுவா உரித்தலும் சேகரித்தலும்

D. காணிகளிலிருந்து வரி சேகரித்தல் (பு.04)

04. i. கீழே தரப்பட்டுள்ளவை ஒல்லாந்தர் ஆட்சிக் காலப்பகுதியில் சிங்கள மொழியில் கலந்த சொற்கள் சில. அது **எத்துறை** சார்ந்தது எனக் குறிப்பிடுக.

A. தரப்பு

B. தோல்க்க

C. வெந்தேசி (பு.03)

ii. கீழே தரப்பட்ட கல்வித்துறை தொடர்பாக ஒல்லாந்தரின் செயற்பாடுகள் எவை?

A. பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டமை

B. பாடத்திட்டம்

C. பாடசாலை மேற்பார்வை

D. உயர்கல்வி (பு.04)

iii. ஒல்லாந்து சமயத்தைப் (புரட்டஸ்தாந்து) பரப்புவதற்கு எடுத்த முயற்சிகள் 2 னை எழுதி விளக்குக. (பு.04)

05. I. ஆங்கிலேயருக்கு திருகோணமலைத் துறைமுகம் முக்கியத்துவம் வாய்ந்தமைக்கான காரணங்கள் 3 தருக. (பு.03)

ii. கீழே தரப்பட்டுள்ளவை மலைநாட்டுக்கு தூதுப்பயணங்கள் மேற்கொண்ட தூதுவர்கள் இருவரும் சந்தித்த மலையக மன்னர்களைக் குறிப்பிடுக.

1. ஜோன் பைபஸ்
2. ஹியுபொயிட் (பு.04)

iii. 1797 இல் வர்த்தகக் கம்பனியின் நிர்வாகத்திற்கு எதிராக கரையோரப் பிரதேசத்தில் ஏற்பட்ட கலகத்துக்கான காரணங்கள் 2 கூறி விளக்குக. (பு.04)

06. I. ஆங்கிலேயர் 1803 இல் மலையகத்தைக் ஆக்கிரமிப்பதற்கு ஏதுவான காரணங்கள் 3 தருக. (பு.03)

ii. படத்தில் காட்டப்பட்டுள்ள பிரித்தானிய,



A. ஆளுநர் யார்?

B. இவரது மலையகம் தொடர்பான கொள்கை யாது?

C. இவர் அல்லாத வேறு 2 ஆங்கில ஆளுநர்களைக் குறிப்பிடுக. (பு.04)


iii. மலையக இராசதானி தொடர்பில் ஜோன் டொயிலி பின்பற்றிய தந்திரோபாயக் கொள்கையின் தெட்டத் தெளிவான அம்சங்கள் 4 தருக. (பு.04)



kalvi.lk

07. i. 1848 சுதந்திரப் போராட்டத்திற்கு காரணமாயமைந்த வரிகள் 3 தருக. (பு.03)

ii. கீழே தரப்பட்டுள்ள தகவல்களை ஆதாரமாகக் கொண்டு புதிர்பெட்டிகளை நிரப்புக.




மேலிருந்து கீழ்

1. 1848 சுதந்திரப் போராட்டத் தலைவர் ஒருவர்.
2. ஒல்லாந்தரின் பிரதான வர்த்தகப்பொருள்
3. சுதந்திரப் போராட்டத்தை அடக்க பிரித்தானியர் கையாண்ட வழிமுறை
4. 1818 கிளர்ச்சி ஆரம்பமான இடம்
5. ஆளுநர் டொரிங்டனால் விதிக்கப்பட்ட வரி ஒன்று
6. மன்னன் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனின் மனைவி
7. இலங்கையில் அமுலான முதலாவது யாப்பு
8. 1815 கண்டி ஒப்பந்தம் நிகழ்ந்த இடம் (பு.08)



kalvi.lk

தரம் 01 - 10

# 3ம் தவணை

**REVISION | PAPER DISCUSSION**

## ஆரம்பம் - 01.12.2024

மீட்டல் மற்றும் வினாத்தாள்
கலந்துரையாடல் வகுப்புகள்

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
இணைந்து கொள்ள முடியும்.

**JOIN NOW**

## புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன..

### கட்டண விபரங்கள்

**தமிழ் Medium**

| | |
|---|---|
| தரம் 01-02 | 2000/= |
| தரம் 03-05 | 2500/= |
| தரம் 06-10 | 3000/= |

**English Medium**

| | |
|---|---|
| தரம் 06-07 | 3500/= |

Education கல்வி අධ්‍යාපන

KALVI.LK

WHATSAPP

**075 287 1457**